# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| பெயர் | - | திரு. தெய்வசிகாமணி | அசல் வழக்கு எண். | 45/2012 |
|---|---|---|---|---|
| த/பெ. | - | | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

08.07.2025.

1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் 3-1/4 செண்ட் பூமிக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் இரண்டு அபிமன்ன கவுண்டர்கள் இருப்பதால்தான் குழப்பம் ஏற்பட்டது என்றால் சரிதான். நடேச கவுண்டர் என்பவரின் மகன் அபிமன்னன் ஒருவர் என்றும் பெருமாள் கவுண்டர் என்பவரின் மகன் அபிமன்னன் 3-1/4 ஆகிய இருவர் உள்ளனர் என்றால் சரிதான். நான் நடேசகவுண்டரின் மகன் அபிமன்னன் என்பவரின் வம்சா வழியில் வருபவர் என்றால் சரிதான்.

2. மற்ற வாதிகளுக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டருக்கும், நடேசகவுண்டருக்கும் என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. சர்வே எண்.109/2-ஐ பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணேச கவுண்டர் என்பவருக்கு மஞ்சினி மற்றும் அபிமன்னன் வாரிசுகள் என்றால் சரிதான். தற்போது மஞ்சினி மற்றும் அபிமன்னன் ஆகியோர்கள் உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

மஞ்சி என்பவரின் வாரிசுகள் செங்கல்வராயன் (1 ம் பிரதிவாதி), கோவிந்தசாமி, நடராஜன் (3 ம் பிரதிவாதி), நடேசன் (4 ம் பிரதிவாதி), ஜெயகோபால் (5 ம் பிரதிவாதி ), பாலு (எ) சந்திரன் என்றால் எனக்கு தெரியாது.

3. அபிமன்னன் என்பவரின் வாரிசுகள் சாமிநாதன், லெனின் ( 9 ம் பிரதிவாதி), ராமதாஸ், துரைராஜ் (2 ம் வாதி), சக்கரவர்த்தி (3 ம் வாதி), தெய்வசிகாமணி (4 ம் வாதி) ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், அபிமன்னன், மணிவாசகம், காசிநாதன், ஆகியோர்கள் பெருமாள் கவுண்டர் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் என்பவரின் மகன்தான் தனுசு (8 ம் பிரதிவாதி ) என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி என்னுடைய தாத்தா 3-1/4 செண்ட்டை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

4. என்னுடைய சாட்சியத்தில் அபிமன்னன் மற்றும் மஞ்சினி ஆகியோர்கள் சர்வே எண். 82/5 பி மற்றும் 109/2 பூமிகளை பாக பிரிவினை செய்துகொண்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாய் மொழி பாக பிரிவினையை அனுசரித்து பின்னிட்டு எந்த ஆவணமும் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. எந்த ஆவணம் எப்போது யார் பெயரில் எழுதப்பட்டுள்ளது என்றால் என்னுடைய அப்பா பெயரில் எழுதப்பட்டுள்ளது. வருடம், தேதி எனக்கு நினைவில்லை. வாய்மொழி பாக பிரிவினையை அனுசரித்து பின்னிட்டு எழுதப்பட்டதாக சொல்லும் பத்திரங்களைப்பற்றி என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. சர்வே எண்.82/5 பி பூமியானது மஞ்சினி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டதாக என்னுடைய சாட்சியத்தில் சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

82/5 பி பூமியின் வருவாய் ஆவணங்களை பார்வையிட்டால்தான் நான் சொல்வதுபோல் வாய்மொழி பாக பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்று சொல்லமுடியும் என்றால் சரிதான். சர்வே எண்.82/5 பி பூமிக்கான எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. 1 முதல் 7 பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் ஒரு பகுதியை 8 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனது தாந்த வாங்கிய சொத்திற்கான பட்டாவானது பாதி மஞ்சினி பெயரிலும் மீதம் பாதியை அபிமன்னன் பெயரிலும் வருகிறது என்றால் சரியல்ல, அபிமன்னன் பெயரில் மட்டும்தான் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் வழக்கு சொத்தான 132/2 பி பூமிக்கு பெ. கோபாலகிருஷ்ணன் மற்றும் பெ. அபிமன்னன் பெயரில் ஆகியோர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான்.

7. பெ. அபிமன்னன் என்பவர் பெருமாள் கவுண்டர் என்பவரின் மகன் என்றால் சரிதான். வழக்கு சொத்து வீட்டு மனை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமானது நிலத்திற்கு தீர்வை செலுத்தியதற்கான ஆவணம் என்றால் ஏற்கனவே விவசாய நிலமாக இருந்தது, தற்போது வீடு கட்டப்பட்டுள்ளது. நிலம்தான் தற்போது வீட்டு மனையாக மாறியுள்ளது என்று என்னுடைய வழக்கு மற்றும் சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் அடித்து திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கிரையம் வாங்கிய சொத்தை மஞ்சினி 1-3/4 செண்ட்டும், அபிமன்னன் 1-3/4 செண்டும் பிரித்துக்கொண்டனர் என்றால் சரியல்ல,என் தந்தையிடம்தான் உள்ளது. தாவா சொத்தில் மஞ்சினி எந்த பகுதியில் உள்ளார் என்றால் அவர் தாவா சொத்தில் இல்லை, அவர் வேறு சொத்தில் இருந்து வருகிறார். மஞ்சினி இருந்து வரும் சொத்திற்கான சர்வே எண்ணை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை மஞ்சினியும், அபிமன்னனும் தலா 1-3/4 செண்ட்டை பிரித்துக்கொண்டு அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல, தற்போது வரை பிரிக்காமல் உள்ளது.

9. மஞ்சினிக்கு பாத்தியப்பட்ட 1-3/4 செண்ட்டை அவரது வாரிசுகளான 1 முதல் 7 பிரதிவாதிகள் 8 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டனர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி என் தாத்தா கிரையம் வாங்கிய 3- 1/4 செண்ட் உள்ள சர்வே எண்ணில் பெருமாள் கவுண்டரும், அதே சர்வே எண்ணில் 2-3/4 செண்டும் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் கிரையம் வாங்கிய 2-3/4 செண்ட்டு பூமியும் அவரது வாரிசுகளுக்கிடைய ஏற்பட்ட வாய்மொழி பாக பிரிவினையில் 8 ம் பிரதிவாதியின் தகப்பனாரான கோபாலகிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாள்கவுண்டர் கிரையம் வாங்கிய 2-3/4 செண்ட்டை தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் 8 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். மஞ்சினி என்பவருக்கு ஒதுக்கிய 1-3/4 செண்ட் பூமியைத்தான் 8 ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

10. பெருமாகள் கவுண்டர் வாங்கிய 2-3/4 செண்ட் பூமி மற்றும் தனுசு கிரையம் வாங்கிய 1-3/4 செண்ட்டு பூமியையை சேர்த்து 8 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.82/5 பி மற்றும் 109/2 பூமியில் தற்போது வரை மஞ்சினி மற்றும் அபிமன்னன் ஆகியோர்கள் பெயர்களுக்கு கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல. நத்தம் சர்வே நடவடிக்கையின் போது அனுபவத்தின் அடிப்படையில் மஞ்சினி பெயரில் இருந்த பட்டாவானது மாற்றப்பட்டு பெ. கோபாலகிருஷ்ணன் மற்றும் பெ. அபிமன்னன் ஆகியோர்கள் பெயர்களுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.4 ஆவணத்தில் ந. அபிமன்னன் என்பதற்கு பதிலாக பெ. அபிமன்னன் என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. புருபத்தில் உள்ள அனுபவத்தின் அடிப்படையில்தான் பெ. அபிமன்னன் பெயருக்கு வருவாய் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

8ம் பிரதிவாதி, 1 முதல் 7 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

மறு விசாரணை - இல்லை.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.